**அப்போஸ்தலனாகிய யாக்கோபு**

**வாசிக்க**: 2**கொரிந்தியர்** 1:1-24

யாக்கோபின் தகப்பன் பெயர் செபெதேயு. அம்மா பெயர் சலோமி. யாக்கோபு மீன் பிடித்தொழிலை செய்து வந்தார். இவர் யோவானின் அண்ணன் ஆவார். யாக்கோபு என்றால் தட்டி வீழ்த்துபவன் என்று அர்த்தமாகும். இயேசு கிறிஸ்துவின் முக்கியமான மூன்று சீடர்களில் ஒருவராவார். (பேதுரு, யாக்கோபு, யோவான்) இவர்கள் இயேசு சென்ற எல்லா இடங்களுக்கும் கூடவே சென்றார்கள். அவர் கூடவே இருந்தார்கள். இயேசு யாக்கோபுக்கும், யோவானுக்கும் இடிமுழக்க மக்கள் என்று பெயர் வைத்தார். மாற்கு 3:17 யாக்கோபின் தாய் சலோமி இயேசுவின் தாய் மரியாளின் உடன் பிறந்த சகோதரி ஆவார். மத்தேயு 27:59, மாற்கு 15:40, யோவான் 19:25-27. ஆக யாக்கோபு இயேசுவின் மிக நெருங்கின உறவுமுறையான்.

இயேசு கிறிஸ்துவோடு இருந்த ஆரம்ப காலத்தில் யாக்கோபு பழிவாங்கும் எண்ணமுடையவராகவும் லூக்கா 9:51-56, பொறாமை உள்ளம் படைத்தவனாகவும் மத்தேயு 16:17-19, தன்னலம் கொண்டவராகவும் மாற்கு 10:35-45 இருந்தார். ஆனால் இவர் இயேசு கிறிஸ்துவோடு இருந்தாலும் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தை பெற்றதாலும் தன்னுடைய வாழ்வில் மாபெரும் மாறுதலைப் பெற்றார். இந்த தவறான குணங்கள் இவர் வாழ்வைவிட்டு முற்றிலுமாக விலகியது.

யாக்கோபு பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தை பெற்றப்பின் சில வருடங்கள் ஸ்பெயின் தேசத்தில் கைதிகளாக இருந்த யூதர்கள் மத்தியில் இயேசுவை கிறிஸ்து என்று அறிவித்து வந்தார். அதைத் தொடர்ந்து ஸ்பெயின் வடமேற்கு பகுதியிலும் ஊழியம் செய்தார். மேலும் கம்போஸ்டெல்லா (இன்றைய சான்றியாகோ) நகரில் பெரிய சபையை நாட்டினார். அதன் பின் எருசலேமுக்குத் திரும்பினார். இதன் மத்தியில் பேதுருவும், யாக்கோபும் இந்தியாவிற்கு வந்து ஊழியம் செய்ததாக சில வரலாற்று ஆசிரியர்கள் சொல்கிறார்கள்.

யாக்கோபு 14 வருடங்கள் பல இடங்களில் ஊழியம் செய்து தேவனுடைய இராஜ்யத்தை விரிவடைய செய்தார். ஏரோது அகரிப்பா இராஜா யூதர்களை பிரியப்படுத்துவதற்காக யாக்கோபை கி.பி 44 ல் கழுத்தை வெட்டி கொன்றுப் போட்டான். அப்போஸ்தலர் 12:1-3. இயேசு கிறிஸ்துவுக்காக முதல் இரத்த சாட்சியாக யாக்கோபு மரித்தார்.

**கேள்விகள்**:

1. யாக்கோபு என்றால் என்ன?

2. இயேசு கிறிஸ்துவுக்காக முதல் இரத்த சாட்சியாக மரித்தது யார்?

3. யாக்கோபின் தவறான குணங்கள் மாறியதற்கு காரணம் என்ன?